Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 010 | வெள்ளிக்கிழமை Friday | 10.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# “தொகுதி மறுவரையறையில் ஏன் இந்த அவசியமற்ற அவசரம்?”

## மத்திய அரசுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கண்டனம்



சென்னை: தொகுதி மறுவரையறையில் ஏன் இந்த அவசியமற்ற அவசரம்? ஏன் மாற்றி மாற்றிப் பேசுகிறீர்கள்? இதனால் உண்மையாகப் பயனடையப் போவது யார்? எனும் கேள்விகளுக்கு நாட்டு மக்கள் முறையான விளக்கத்தைக் கோருகிறார்கள் என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "பிரதமர் மோடி தலைமையிலான என்டிஏ அரசு நாடாளுமன்றத்தின் அடிப்படை அமைப்பையே திட்டமிட்டுச் சீர்குலைக்கிறது. விவாதங்களுக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் பதில் கூறுவதற்குமான தளமாக இருக்க வேண்டிய நாடாளுமன்றமானது, உறுப்பினர்கள் தங்கள் தொகுதி, மாநில மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்குக் கூட போதிய நேரமளிக்காத வெற்றுச் சம்பிராதய அவையாகச் சுருக்கப்பட்டு வருகிறது.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான முன்மொழிவு, "குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்" என்ற அவர்களின் சொந்த முழக்கத்துக்கே எதிரானதாக அமைந்துள்ளது. இந்த முடிவினால் செலவுதான் கூடும், மக்களின் வரிப்பணம் வீணாகும், நாடாளுமன்றச் செயல்பாடுகளின் தரம் குறையும்.

மேலும், இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியமாக வரையறுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1-க்கும் இது எதிரானது. மாநிலங்களின் குரலைப் புறக்கணித்துவிட்டு, முறையான கலந்தாலோசனையும் செய்யாமல் தவிர்த்துவிட்டுச் செயல்படுவது ஜனநாயகத்துக்கு எதிரானது. இது இந்தியாவின் பன்முக, கூட்டாட்சித் தன்மையைச் சிறுமைப்படுத்தும் ஒற்றைத்துவ எல்லைமீறலாகும்.

இதற்கெல்லாம் மேலாக, இந்தத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையானது பாஜக ஆதிக்கம் செலுத்தும் வட மாநிலங்களுக்கு ஆதரவாக வலுவூட்டி, தென் மாநிலங்களின் குரலை நெரிக்கும். மூத்த தலைவர் திரு. சித்தராமையா சீற்றத்தோடு கூறியது போல, இது நடுநிலையான நடவடிக்கை அல்ல, இது அரசியல் நோக்கம் கொண்ட திட்டமிட்ட கட்டமைப்பு மாற்றம். வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இருமடங்காகும் அதேவேளையில் தென் மாநிலங்களின் அளவு 24 விழுக்காட்டிலேயே தேங்கி நிற்கிறது. இது மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியதற்காகத் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் மற்றும் தெலங்கானா போன்ற மாநிலங்களைத் தண்டிப்பதாகும்.

இந்த நடவடிக்கையால் கூட்டாட்சி சிதைக்கப்பட்டு, அதிகாரம் ஒரு சில பகுதிகளில் மட்டுமே குவிக்கப்படும் என்று சித்தராமையா, பினராயி விஜயன் மற்றும் ரேவந்த் ரெட்டி ஆகிய தென் மாநில முதலமைச்சர்கள் மிகச்சரியாக எச்சரித்துள்ளனர்.

இது அவசரகதியில் தற்போது செய்யப்படுவதும் நம் அச்சத்தை அதிகமாக்குகிறது. பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் இத்தகைய முக்கிய நடவடிக்கையை மாநிலத் தேர்தல்களுக்கிடையே திணிக்க வேண்டிய அவசியம் என்ன? தேர்தல் சார்ந்த கதையாடல்களை வடிவமைக்கவும், பெண் வாக்காளர்களிடம் செல்வாக்கு பெறுவதற்காகவும் 2024 நாடாளுமன்ற மக்களைவைப் பொதுத்தேர்தலின் போது செய்த முந்தைய முயற்சிகளைப்போலவே இதுவும் அமைந்துள்ளது. பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம். அதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை. ஆனால், பொறுப்போடு செயல்பட்ட மாநிலங்களைத் தண்டிக்கும் வகையில் தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கோருகிறோம். அவர்களின் நோக்கம் உண்மையானதாக இருந்தால், இப்போதுள்ள தொகுதி அளவிலேயே மகளிருக்கான 33 இட ஒதுக்கீட்டை வழங்குவதை எதுவும் தடுக்கவில்லையே?

இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்கு ஆதரவான சமூகநீதிக் காவலர் என்று ஒன்றிய அரசு தங்களை அழைத்துக்கொள்வதும் வெற்று முழக்கம்தான். 'வளர்ந்த இந்தியா' என ஒருபுறம் சொல்லிக்கொண்டே பல ஆண்டுகளாகக் கிரீமி லேயர் உச்சவரம்பை 8 லட்சம் ரூபாயில் இருந்து மாற்றாமல் வைத்திருந்து ஓ.பி.சி. மக்களுக்கு அவர்களுக்குரிய பங்கீடு கிடைக்காமல் வஞ்சித்தார்கள். பிற்படுத்தப்பட்ட மகளிரின் பிரதிநிதித்துவத்துக்கான எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை. 2027 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் முதல்முறையாக நாம் அறியவுள்ள சாதிவாரி எண்ணிக்கை முடிவுகளைக் கூட பரிசீலிக்காமல் அவசரமாக அவர்கள் செயல்படுவது இதில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை அம்பலப்படுத்துகிறது. இது அதிகாரமளித்தல் அல்ல, புறக்கணிப்புக்கு மாறுவேடம் போட்டுச் சீர்திருத்தம் என்கிறார்கள்.

மேலும், தொகுதி மறுவரையறைக்கான அடிப்படையாகக் கொள்ளப் போவது எது என்பதிலும் கொஞ்சம் கூட வெளிப்படைத்தன்மை இல்லை. 2021 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் செய்யப்போகிறார்களா அல்லது மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முந்தைய காலமான 1971-ஆம் ஆண்டு எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா? மாற்றி மாற்றிப் பேசுவதும், வெற்று உத்தரவாதங்களும் நம் ஐயத்தை மேலும் அதிகரிக்கவே செய்கின்றன. மொத்தத்தில் இந்த நடவடிக்கை மாநிலங்களின் மீது பெரும் நிதிச்சுமையை ஏற்றும், சட்டமன்றங்களை விரிவாக்கம் செய்ய அல்லது புதிதாகக் கட்டும் நிலைக்குத் தள்ளும். இவை அனைத்தும் முறையான கலந்தாலோசனை எதுவுமின்றி நடக்க இருக்கிறது. இது கூட்டுறவுக் கூட்டாட்சியியல் மீதான நேரடித்தாக்குதல் ஆகும்.

இவர்கள் செய்ய நினைப்பது சீர்திருத்தமே அல்ல, இது அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து, நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்தி, தென்னகத்தை விளிம்புநிலைக்குத் தள்ளி, சமூகநீதியைச் சிறுமைப்படுத்துவதற்கான தன்னிச்சையான அரசியல் சதித் திட்டம்.

ஏன் இந்த அவசியமற்ற அவசரம்? ஏன் மாற்றி மாற்றிப் பேசுகிறீர்கள்? இதனால் உண்மையாகப் பயனடையப் போவது யார்? எனும் கேள்விகளுக்கு நாட்டு மக்கள் முறையான விளக்கத்தைக் கோருகிறார்கள் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சட்டசபை தேர்தல் 2026: புதுச்சேரியில் 72.40%, கேரளாவில் 62.71%, அசாமில் 75.91% வாக்குகள் பதிவு

புதுச்சேரி: புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மொத்தமுள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக நடைபெற்று வருகிறது. இதற்காக புதுச்சேரி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இரு ந்தன

ஆளும் என்.ஆர். காங்கிரஸ், பாஜக, அதிமுக, லட்சிய ஜனநாயகக் கட்சி அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் (என்டிஏ), திமுக, காங்கிரஸ், விசிக அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணிக்கும் இடையே அங்கு நேரடி போட்டி நிலவி வருகிறது. இவற்றை தவிர, நாம் தமிழர், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஆகிய கட்சிகளும் களத்தில் உள்ளன.

30 சட்டமன்றத் தொகுதிகளில் மொத்தம் 294 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 9 லட்சத்து 50 ஆயிரத்து 630 பேர் வாக்களிக்கவுள்ளனர்.



அவர்களில் 5.03 லட்சம் பெண் வாக்காளர்களும், 4.4 லட்சம் ஆண் வாக்காளர்களும் உள்ளனர். தேர்தலுக்காக புதுச்சேரி முழுவதும் 1,099 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டத்ய்.

தேர்தல் பணிகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகள் ஈடுபடவுள்ளனர். ஆயிரக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்கு இந்த முறை கடுமையான போட்டி நிலவி வருகிறது. இளைஞர்களின் பெரும் ஆதரவுடன் விஜய்யின் தவெக களமிறங்கியுள்ளதே இதற்கு காரணம்.

மேலும், தவெக களமிறக்கியுள்ள வேட்பாளர்களில் பலர் முன்னாள் எம்எல்ஏக்களாகவும் இருப்பதால் ஆளுங்கட்சிக்கும், பிரதான எதிர்க்கட்சிகளுக்கும் கடும் சவாலாக தவெக உருவாகியுள்ளது.

புதுச்சேரியில் 72.40% வாக்குகள் பதிவு: 30 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட புதுச்சேரியில் 10 லட்சத்து 14 ஆயிரத்து 70 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இங்கு காலை 11 மணி நிலவரப்படி 37% வாக்குகளும், பகல் 1 மணி நிலவரப்படி 56.83% வாக்குகளும் பதிவாகின. பிற்பகல் 3 மணி நிலவரப்படி 72.40% வாக்குகள் பதிவாகின.

இங்கு என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும், காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகமும், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியும் இந்த தேர்தலில் முக்கிய சக்திகளாகக் கருதப்படுகின்றன.

கேரளாவில் 62.71% வாக்குகள்: 140 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட கேரளாவில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. 2.71 கோடி வாக்காளர்களைக் கொண்ட கேரளாவில் 883 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். காலை 11 மணி நிலவரப்படி கேரளாவில் 33.30% வாக்குகள் பதிவாகின. பகல் 1 மணி நிலவரப்படி 49.70% வாக்குகள் பதிவாகின. பிற்பகல் 3 மணி நிலவரப்படி 62.71% வாக்குகள் பதிவாகி உள்ளன.

இங்கு ஆளும் சிபிஎம் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணிக்கும், பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. அதேநேரத்தில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்த தேர்தலில் முக்கிய சக்தியாக களத்தில் உள்ளது.

அசாமில் 75.91% வாக்குகள் பதிவு: 126 சட்டப்பேரவைத் தொகுதிகளைக்கொண்ட அசாமில் காலை 7 மணி முதல் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றி வருகின்றனர். காலை 11 மணி நிலவரப்படி இந்த மாநிலத்தில் 38.92% வாக்குகள் பதிவாகின. பகல் 1 மணி நிலவரப்படி 59.63% வாக்குகள் பதிவாகின. பிற்பகல் 3 மணி நிலவரப்படி 75.91% வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்த மாநிலத்தில், ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

இடைத்தேர்தல்கள்: கர்நாடகாவில் இரண்டு தொகுதிகள், நகாலாந்து மற்றும் திரிபுராவில் தலா ஒரு தொகுதி ஆகியவற்றுக்கும் இன்று இடைத்தேர்தல் நடைபெற்று வருகிறது. கர்நாடகாவில் உள்ள பாகல்கோட் தொகுதியில் பிற்பகல் 3 மணி நிலவரப்படி 54.82% வாக்குகள் பதிவாகி உள்ளன. தாவணகெரே தெற்கு தொகுதியில் 49.66% வாக்குகள் பதிவாகி உள்ளன. நாகாலாந்தின் கோரிடாங் சட்டப்பேரவைத் தொகுதியில் 75.06% வாக்குகளும், திரிபுராவின் தர்மநகர் சட்டப்பேரவைத் தொகுதியில் 70.09% வாக்குகளும் பதிவாகி உள்ளன.

புதுச்சேரி திருக்கனூர் பகுதியில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் பாஜக நிர்வாகிகள் வாக்கு சேகரிப்பதாக காங்கிரஸ் கட்சியினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, அங்கு வந்த காங்கிரஸார் வாக்குச்சாவடிக்குள் இருந்த பாஜகவினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒருகட்டத்தில் வாக்குவாதம் முற்றி இரு தரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது. இதையடுத்து, அங்கு வந்த போலீசார், மோதலில் ஈடுபட்டவர்களை தடியடி நடத்தி கலைத்தனர்.

### வாக்குப்பதிவு இயந்திரத்தில் திடீர் புகை!

காரைக்கால் தெற்கு தொகுதி வாக்கு ச்சாவடியில் வாக்கு இயந்திரத்தில் திடீரென புகை வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள பேட்டரியை அதிகாரிகள் மாற்றினர். பின்னர் இயந்திரம் வழக்கம் போல இயங்கியதால், வாக்குப்பதிவு மீண்டும் தொடங்கியது.

### டிரோன் கேமராவில் சிக்கிய பணப்பட்டுவாடா!

புதுச்சேரியில் தேர்தல் நடைபெறுவதை ஒட்டி அங்கு டிரோன்கள் மூலமாக கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், மணவெளி தொகுதியில் வாக்காளர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்ட காட்சி டிரோன் கேமராவில் சிக்கியது.

இதையடுத்து, பணம் விநியோகித்தவர்களை போலீசார் கையும் களவுமாக சிக்கினர்.

அவர்களிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் ராமஜெயம் பிரச்சாரம்




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியான டேவிஸ்புரம், சிலுவைப்பட்டி சந்திப்பு, தாளமுத்து நகர் மெயின், சொட்டையன் தோப்பு விளக்கு, பாரதி நகர், உள்ளிட்ட பகுதிகளில் திருச்செந்தூர் தொகுதியின் திமுக வேட்பாளரும் அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்களுடன் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தொடர்ந்து சவேரியார்புரம் பகுதியில் தேர்தல் காரியாலயத்தை திருச்செந்தூர் தொகுதியின் திமுக வேட்பாளரும் அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் ஆகியோர் திறந்து திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றிய செயலாளர் சரவணகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ராஜேந்திரன், மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன், ஒன்றிய துணை செயலாளர் கணேசன், மாவட்ட வர்த்தகர் அணி பிளோமின்ராஜ், மாவட்ட இளைஞரணி ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி நெல்சன், ஒன்றிய சுற்றுசூழல் அணி ராஜேந்திரன், மகளீரணி ஆரோக்கியமேரி, கிளை செயலாளர் ஜேசுராஜ், ஜோதிடர் முருகன், சேவியர், பாரதி, தர்மலிங்கம், பொன்னுச்சாமி, இம்மானுவேல், பாரி மற்றும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட டேவிஸ்புரம், சிலுவை பட்டி சந்திப்பு தாளமுத்து நகர் மெயின் ரோடு சொட்டையன் தோப்புகளுக்கு பாரதி நகர் உள்ளிட்ட பகுதிகளில் திருச்செந்தூர் தொகுதியின் திமுக வேட்பாளரும் அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து தன்னை வெற்றி பெற செய்யுமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். இதில் மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன் ஏற்பாட்டில் தாளமுத்து நகர் மெயின் ரோடு பகுதியில் பிரம்மாண்ட வரவேற்புஅளித்துபூங்கொத்துகொடுத்துவரவேற்றார்.தொடர்ந்துதேர்தல்காரியாலத்தில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ. ராமஜெயம் அவர்களுக்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அந்தோணி தனுஷ் பாலன் சால்வை அணிவித்து வரவேற்றார்.



சமரச தீர்வு நாளையொட்டி கள்ளக்குறிச்சி நீதிமன்ற வளாகத்தில் இருந்து சமரசம் நாடுவீர் சமரச விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் விதமாக மாவட்ட முதன்மை நீதிபதி தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தில் வழக்கறிஞர்கள் பதாகைகளை கையில் ஏந்தி கொண்டு துண்டு பிரசுரங்களை வழங்கி பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்



ஈரோடு மாநகராட்சி 43வது வார்டு காங்கிரஸ் மாமன்ற உறுப்பினர் சபுராம ஜாபரின் கணவரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருமான ஜாபர் சாதிக், அக்கட்சியிலிருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார். தவெக ஈரோடு மாவட்டச் செயலாளரும், ஈரோடு கிழக்கு தொகுதி வேட்பாளருமான விஜய் பாலாஜி முன்னிலையில் இந்த இணைப்பு நிகழ்வு நடைபெற்றது.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியான டேவிஸ்புரம், சிலுவைப்பட்டி சந்திப்பு, தாளமுத்து நகர் மெயின், சொட்டையன்தோப்புவிளக்கு, பாரதிநகர், உள்ளிட்டபகுதிகளில்திருச்செந்தூர் தொகுதியின் திமுக வேட்பாளரும் அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு பிரச்சாரம் மேற்கொண்டார். இதில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பொன்பாண்டி ரவி ஏற்பாட்டில் சொட்டையன் தோப்பு பகுதியில் பிரம்மாண்ட வரவேற்பு அளித்து மாலை அணிவித்து வரவேற்றார். தொடர்ந்து தேர்தல் காரியாலத்தில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ.ராமஜெயம்அவர்களுக்குமாவட்டசுற்றுச்சூழல்அணிஅமைப்பாளர்பொன்பாண்டி ரவி சால்வை அணிவித்து வரவேற்றார்.

# தேவகோட்டையில் பள்ளி மாணவர்கள் வீதிகளில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரம் - 100% வாக்களிக்க அழைப்பு




தேவகோட்டை - சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள், அரசு தோட்டக்கலைப் பண்ணை அலுவலர்களுடன் இணைந்து வீதிகளில் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரத்தை சிறப்பாக நடத்தினர்.

"100% வாக்களிக்கவும்", "ஜனநாயகத்தை காக்க ஒருவிரலை பயன்படுத்துங்கள் " போன்ற கோஷங்களுடன் மாணவர்கள் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பல்வேறு செயல் முறைகளின் மூலம், வீதிகளில் சென்ற பொதுமக்களுக்கு தேர்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் ஆசிரியை முத்துமீனாள் வரவேற்புரை வழங்கினார். தலைமையாசிரியர் லெ .சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். தேவகோட்டை தோட்டக்கலை உதவி இயக்குனர் பெப்பின் இளம்பரிதி முன்னிலை வகித்து, மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தேர்தல் விழிப்புணர்வின் அவசியத்தை விளக்கிப் பேசினார்.

மாணவர்கள் உரையாடல், நாடகம், கவிதை, பாடல் ஆகிய வடிவங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தினர். மாணவி நித்யா "அரசியலை அறிந்துகொள்,ஆட்களைதெரிந்துகொள்" என்ற தலைப்பில் பேசியார். மாணவி ரக்ஷிதா "முதல் முறை வாக்களிக்கும் வாக்காளர்" என்ற தலைப்பில் தனது கருத்துகளை பகிர்ந்தார். மாணவி ரித்திகா "எனது வாக்கு எனது உரிமை" என்ற தலைப்பில் பேசினார். மாணவி நந்தனா ஒரு விரல்மூலம்நமதுதலையெழுத்தை மாற்றுவோம் " போன்ற பாடல்களின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், மாணவிகள் மாலினி மற்றும் மோனிகா "நமது வாக்கு நமது வலிமை" என்ற தலைப்பில் உரையாடல் நிகழ்ச்சி நடத்தினர்.இந்நிகழ்ச்சிகளை கண்ட பொதுமக்கள் மாணவர்களை பாராட்டி வாழ்த்தினர்.

இந்த நிகழ்வில் தேவகோட்டை தோட்டக்கலை பண்ணை உதவி அலுவலர் விக்னேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். ஆசிரியர் ஸ்ரீதர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். நிறைவாக ஆசிரியை வள்ளிமயில் நன்றி உரை வழங்கினார்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ. ராமஜெயம் சொட்டையன் தோப்பு பகுதியில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது, ஒன்றிய செயலாளர் சரவணகுமார் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் பை.மூ. ராமஜெயம் அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார்.

## ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பு



ஈரோடு மாவட்டத்தில் எதிர்வரும்தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல்-2026-ஐ முன்னிட்டு 21.04.2026 அன்று காலை 10.00 மணிமுதல் வாக்குப்பதிவு நடைபெறும் 23.04.2026 அன்று நள்ளிரவு 12.00 மணி வரையிலும் மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளான 04.05.2026 ஆகிய தினங்களில் "மது விற்பனை இல்லாத நாளாக" அனுசரிக்க வேண்டும் என்றும், அதன்படி ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து FL2 முதல் FL11 (FL6 உரிமத்தலம் தவிர) வரையிலானஉரிமத்தலங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் (Tasmac) நடத்தும் அனைத்துமதுபானக்கடைகள்அவற்றுடன்இணைந்த மதுக்கூடங்கள் (பார்கள்) மூடப்பட வேண்டும் என்றும் சென்னை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர் அவர்களின் கடிதம் P&E2(1)/129/2017, நாள்: 06.04.2026-ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து FL2,FL3 FLA(A) மற்றும் FL7 ஆகிய உரிமத்தலங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் (Tasmac) நடத்தும் அனைத்து மதுபானக் கடைகள் அவற்றுடன் இணைந்த மதுக்கூடங்கள் (பார்கள்) ஆகியவை மூடப்பட்டிருக்கும். அன்றைய தினங்களில் மதுபான விற்பனைகள் ஏதும் நடைபெறாது.மேலும் அன்றைய தினம் மது விற்பனையில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி அதிமுக தேர்தல் பொறுப்பாளராக முன்னாள் மேயர் மல்லிகா பரமசிவம் என்பவரை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நியமித்துள்ளார். மாவட்ட மகளிர் அணிச் செயலாளராகவும்உள்ளஅவருக்கு,இந்தப்புதியபொறுப்பு வழங்கப்பட்டதை அடுத்து கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும்நேரில்சந்தித்துதங்களதுவாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

## நாட்டின் முதல் கடல் விமானம் ரிஷிகேஷில் வெற்றிகரமாக சோதனை





நாட்டில்கடல்வழித்தடம்மற்றும்நீர்நிலைகள் அதிகளவில் உள்ளன. விமான நிலையம் அமைக்க முடியாத இடங்களில் கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்த திட்டமிடப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக ரிஷிகேஷில் வர்த்தக ரீதியாக கடல் விமான போக்குவரத்தை ஏற்படுத்த ஸ்கைஹாப் ஏவியேஷன் என்ற நிறுவனம் தயாராகி வருகிறது.இந்நிறுவனத்தின் கடல்விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் கடந்த 6ம் தேதி தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்தது. கடல் விமானம் கங்கை நதியில் சுமூகமாக தரையிறங்கி, மேலெழும்பியதன் மூலம் இங்கு கடல் விமான போக்குவரத்து சாத்தியமாகும் எனத் தெரிகிறது. இது குறித்து ஸ்கைஹாப் ஏவியேஷன் நிறுவனத்தின் நிறுவனர் அவானி சிங் கூறியதாவது: ஸ்கைஹாப் நிறுவனத்தின் கடல்விமானம் ரிஷிகேஷில் உள்ள கங்கை தடுப்பணையில் தனது பரிசோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளது. விமான போக்குவரத்துக்கான சான்றிதழ் பெறும் நடவடிக்கையில் நாங்கள் இறங்கியுள்ளோம். சான்றிதழ் கிடைத்தவுடன் வர்த்தக ரீதியாக நாங்கள் கடல் விமான போக்குவரத்தை தொடங்குவோம்.லட்சத்தீவு பகுதியிலும் ஸ்கைஹாப் நிறுவனம் கடல் விமான போக்குவரத்தை தொடங்க திட்டமிட்டுள்ளது

. இங்கு ஐந்து தீவுகளை இணைக்கும் வகையில் 19 இருக்கைகள் கொண்ட கடல் விமானத்தை முதல் கட்டமாக இயக்க திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் அமுலு பொன்மலர் திறந்தவெளி வாகனத்தில் பிரச்சாரம் கூட்டணி கட்சியினர் உற்சாக வரவேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம்தனி சட்டமன்ற தொகுதி தி.மு.க.சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் அமுலு பொன்மலரை ஆதரித்து மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பொன். சிவகுமார் தலைமையில் தேவாத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் குமார் முன்னிலையில் தேவாத்தூர் ஊராட்சியில் திறந்தவெளி வாகனத்தில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். அப்போது கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.






கள்ளக்குறிச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் பானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் மாலதி அவர்களை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் அவர்கள்நயினார்பாளையத்தில்பிரச்சாரம்மேற்கொண்டுவருகிறார்.உடன்ரிஷிவந்தியம் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் வசந்தம் கார்த்திகேயன் MLA அவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர்தொல்திருமாவளவன்அவர்கள்மக்களிடையேதிமுகஅரசின்ஐந்துஆண்டுகால சிறப்புகளை எடுத்துரைத்தும் மீண்டும் ஆட்சி அமைத்தால் ஏற்படும் மற்றங்கள் குறித்து கூறி திமுக சார்பில் கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் பானை சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் மாலதி அவர்களுக்கு வாக்களிக்கும்படி தீவிர வாக்கு சேகரிப்பில் இடுப்பட்டு வருகிறார்



தென்காசிமாவட்டம்கடையநல்லூர்சட்டமன்றதொகுதியில்தி.மு.க.தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்வேட்பாளராக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த தி மு ரா சேந்திரன்உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் கடையநல்லூர்சட்டமன்றத் தொகுதி வெற்றிக்கா முன்னாள் நெல்லை சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய மாலைராஜா அவர்கள் புதன் கிழமை அன்று வடகரை அருகேயுள்ள வாவா நகரத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் 8வது வார்டு கவுன்சிலர்,வர்த்தக அணி அமைப்பாளரான திரு.ரகுமத்துல்லா அவர்களிடம் வார்டு நிலவரத்தை கேட்டறிந்தார்தொடர்ந்து கழக வேட்பாளர் வெற்றி பெற ஆலோசனைகள் வழங்கி சென்றார்

## இயற்கை எரிவாயு இணைப்பு வழங்குவது சம்பந்தமாக கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது

### கலெக்டர் ச.கந்தசாமி தகவல்




ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி செய்திக்குறிப்பு–

ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர்தலைமையில்08.04.2026அன்று இயற்கை எரிவாயு இணைப்பு வழங்குவது சம்பந்த மாகதொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவன அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது இக்கூட்டத்தில் குழாய் வழி இயற்கை எரிவாயு (PNG) இணைப்பு வழங்குவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

அதிகரித்து வரும் வணிக பயன்பாட்டிற்கான எரிவாயுதேவையினைநிறைவேற்றும்பொருட்டு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேசன் (BPCL) லிமிடெட் குழாய் வழி இயற்கை எரிவாயுவினை (PNG) வழங்குவதற்கான கட்டமைப்பினை ஈரோடு மற்றும் பெருந்துறை வட்டங்களில் உருவாக்கியுள்ளது. எனவே, உணவகங்கள், தொழில் நிறுவனங்களி லுள்ள கேண்டீன், விடுதிகள் போன்ற இதர வணிக நிறுவனங்கள் மேற்கண்டகுழாய்வழிஎரிவாயுஇணைப்பினைப் பெற்று பயன் அடையலாம்.குழாய் வழி எரிவாயு வணிக இணைப்பினை பெறுவதற்கு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேசன் நிறுவனத்தினை 9790132679 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி மதிமுக வேட்பாளருக்கு உற்சாக வரவேற்பு



தென்காசி ஏப்ரல் 9தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றதொகுதியில்மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில்மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்திமுராசேந்திரன்நேற்று செங்கோட்டை ஒன்றியம்பகுதிகளில் வாக்கு சேகரித்தார் கலங்காத கண்டிபெரிய பிள்ளை வலசை திருமலை கோவில் பண்பொழி ஐந்து மூக்குதாருஸ்லாம் ஜீம்மா பள்ளிவாசல் தெருமணலூர் சாலை ரோடு மெயின் ரோடு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார் தொகுதி பார்வையாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலை ராஜா அவர்களின் ஆலோசனையின் பேரில் தொகுதி பொறுப்பாளர் குணசேகரன் மற்றும் முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை ஆகியோரது வழிகாட்டுதலின்படிவடகரை பேரூராட்சி தலைவர் ஷேக் தாவுது செங்கோட்டை மேற்கொண்டியை செயலாளர் வல்லம் திவான் ஒலிஆகியோரடு திறந்தவெளி ஜீப்பில் காலை ஏழு மணி முதல்முதற்கட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டார் செல்லும் இடமெல்லாம்ஜாதிமதம்அரசியல் பாராமல் பெண்கள் அவருக்கு வரவேற்பளித்தனர் அவரிடம் தங்களது வெற்றிக்கு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தந்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகை ஒன்றே சாட்சி மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கியவர் மறுபடியும் ஆட்சிக்கு வந்து 2000 ரூபாய் வழங்குவார்என்பதில் எங்களுக்கு எள்ளளவும் மாற்றுக்கருத்து கிடையாது ஆயிரம் ரூபாய் வழங்கும்பொழுது எப்படி வழங்கமுடியும்என கேட்ட எடப்பாடி பழனிச்சாமிதற்போது 2000 தருவேன் பத்தாயிரம் தருவேன் என உதார் விட்டுக் கொண்டிருப்பதுஅரசியலில் கேலிக்குரிய செயலாகும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வரும் தற்போது அண்ணா திமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் கொடுத்த ரூபாய் 5000 அனைத்து மகளிர்களின் வங்கிக் கணக்கில் அனுப்பி வைக்கப்பட்ட அன்று100 நாள் வேலைத்திட்டத்தை எப்படி வேணாலும் நடத்தட்டும் என அதை திமுக தான் தடுத்து நிறுத்துகிறது என சொல்லி கடையநல்லூரில் ஆர்ப்பாட்டம் நடத்தும் பொழுது மகளிர் களை அருவருக்கத்தக்க வகையில்கீழ்த்தரமாக விமர்சித்ததை வரும் தேர்தலில் இந்த மகளிர் அணி பார்த்துக் கொள்ளும் வயிற்றெரிச்சலில் வாய்க்கு வந்தபடி பேசி தீர்த்தார்கள் அவர்களுக்கு காலம் பதில் சொல்லும் ஒற்றை விரலால் உதயசூரியனுக்கு வாக்களித்து எங்களது நன்றி கடனை செலுத்துவோம்என்று வேட்பாளரிடம் உறுதி அளித்தனர் அனைத்தையும் கேட்டுக் கொண்ட வேட்பாளர் உதயசூரியன் சின்னத்திற்கு தங்கள் அளிக்கும் வாக்கு இந்தியாவே எதிர்பார்க்கும் என்ன செய்யப் போகிறார் அதை நாம் பாலோ செய்யலாம் என நினைக்கும் அடுத்த மாநில முதல்வர்களுக்கு முதல்வராய் விளங்கும் முத்தமிழ் அறிஞர் மூத்த தலைவர் டாக்டர் கலைஞர்அவர்களின்மகனாய் ஒட்டுமொத்த தமிழர்களின் ஒரே குரலாய் ஒலிக்கும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்த உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள் என கேட்டுக் கொண்டதோடு செங்கோட்டை பகுதி மக்கள் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு கடையநல்லூர் வருவதை தடுக்கும் பொருட்டு நேரம் காலம் பணம் ஆகியவற்றை மிச்சப்படுத்தும் பொருட்டுசெங்கோட்டை நகராட்சி பகுதியிலும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் செயல்படும் என்ற உறுதியை உங்களுக்கு வழங்குவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன் என்று கூறிவாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்

## மேற்கு வங்கத்தில் விதிமீறல் நடந்தால் மறுதேர்தல்: ஆணையம் எச்சரிக்கை




புதுடெல்லி: மேற்கு வங்கத்தில் வரும் 23, 29 ஆகிய தேதிதகளில் 2 கட்டமாகதேர்தல் நடைபெற உள் ளது. பொதுவாக அங்கு தே ர்தலின்போது வன்மு றைச் சம்பவங்க ள் அதி கம் நிகழ்வது வழக்கம்.

ஆனா ல் இந்த முறை தேர்தல் ஆணையம் விதி களை மிகத் தீவிரமாக அமல் படுத்தத் தயாராகி வரு கிற து. விதி களை மீ றினால் மறுதேர்தல் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக, வாக்குச்சாவடி அதிகாரிகள் மற்று ம் தலைமை அதி காரிக ளுக்குத் தேர்தல் ஆணையம் தெ ளிவான அறி வுறுத்தலை வழங்கி உள் ளது.

இ ந்த முறை முதன் மு றை யாக, செயற்கை நுண் ணறிவு (ஏஐ) வசதி யுடன் கூடிய சிசிடிவி கே மராக்கள் மூலம் வாக் கு ச்சாவடிகள் நே ரலையாகக் கண் கா ணி க் கப்படும். கேம ரா க்கள் அணைக்கப்பட் டாலோ அல் லது சந் தே க த் துக்கு இடமான நட வ டிக்கைக ள் கண் ட றி ய ப்பட்டாலோ உடனடி யாக மறு தேர்தலுக்கு உத்தரவிடப்படும் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

## நந்தா பொறியியல் கல்லூரியில் 25 வது ஆண்டு விளையாட்டு விழா



ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியில் 25 வது விளையாட்டு விழா இனிதே நடைபெற்றது. இவ்விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமை வகித்தார். விழாவில் ஆசிய அளவில் தங்கப்பதக்கமும், அர்ஜீனா விருதும் பெற்ற இந்திய கபாடி அணியின் முன்னாள் வீரர் மனாதி பி. கணேஷன் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று விளையாட்டு விழாவினை கொடியேற்றத்துடன் தொடக்கி வைத்து மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப் மற்றும் எஸ்.திருமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். கல்லூரியின் முதல்வர் முனைவர். யு.எஸ். ரகுபதி வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவிற்கு நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மனாதி பி. கணேஷன் அவர்கள் பரிசுகளைவழங்கிபேசுகையில், வாழ்வில் வெற்றி பெறுவதற்கு விடா முயற்சியும், உழைப்பும் மிகமுக்கியமானது. அதுபோல அனைவரது கூட்டு முயற்சியின் பயனாக ஒரு செயல் வெற்றி பெறும் என்பதற்கு இதுபோன்ற விளையாட்டு விழாவே சாட்சி என்றார்.

பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அனுபவங்களை பெற்றுக் கொண்டு ஒழுக்கம்.நன்னடத்தையுடன் பயணம் செய்தால் நம்முடைய வெற்றியும், பாராட்டும் உறுதிபடுத்தப்படும் என்று கூறினார்.மேலும் உயர் கல்வியினை கற்று ஒரு சிறந்த விளையாட்டு வீரராக வலம் வரும்போது அரசு மற்றும் தனியார் துறைகளில் உயர்ந்த பதவியினை பெறுவற்கு வாய்ப்புகள் அதிகம் என்று கூறி விளையாட்டு போட்டிகளில் வெற்றிப்பெற்ற மாணவர்களுக்கு தனது வாழ்த்தினைத் தெரிவித்தார்.

இதில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை ஆண்கள் பிரிவில் மின்னியல் மற்றும் மின்னணு பொறியியல் துறையினரும், பெண்கள் பிரிவில் மின்னணு மற்றும் தொடர்பியல் பொறியியல் துறையினரும் வென்றார்கள்.மேலும்,இரண்டாம் இடத்தினை ஆண்கள் பிரிவில் முதுகலை வணிக நிர்வாகத் துறையினரும், பெண்கள் பிரிவில் தகவல் தொழில்நுட்ப துறையினரும் வென்றார்கள்.

விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்த உடற்கல்வி இயக்குனர் எஸ். லெட்சுமணன் மற்றும் உடற்கல்வி ஆசிரியை ஜே. தீபனா உட்பட புலமுதல்வர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், கல்லூரி ஊழியர்கள் மற்றும் மாணவர்களை கல்லூரி நிர்வாகத்தினர் பாராட்டினார்கள்.

## தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக சாய்குமார் ஐஏஎஸ் பொறுப்பேற்பு



சென்னை: தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலாளராக சாய்குமார் ஐஏஎஸ் பொறுப்பேற்று கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தேர்தல்வரும் ஏப்ரல் 23ஆம் தேதியும், வாக்கு எண்ணிக்கை மே 4ஆம் தேதியும் நடைபெறுகிறது. தேர்தலுக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்கு குறைவான நாட்களே உள்ள நிலையில், அரசியல் தலைவர்கள் மாநிலம் முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, தேர்தல் நதமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முன்னேற்பாடு களை பரிசீலித்த தேர்தல் ஆணையம், மேலும் சில முக்கிய அதிகாரிகளை மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு அரசு ஆயுதப்படை மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை டிஜிபியாக இருந்த டேவிட்சன் தேவாசிர்வாதத்துக்கு பதிலாக புதிய டிஜிபியாக சந்தீப் மிட்டல் (ஐபிஎஸ்) நியமிக்கப்பட்டு ள்ளார். தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருந்த முருகானந்தத்துக்கு பதிலாக சாய்குமார் ஐஏஎஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகள், தேர்தல் தொடர்பான எந்த பணிகளிலும் நியமிக்கப்படக் கூடாது என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றிரவு தலைமைச் செயலகத்திற்கு வந்த சாய்குமார், புதிய தலைமைச் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்டார்.முன்னதாக, கடந்த மாதம் காஞ்சிபுரம், தஞ்சாவூர், தென்காசி, பெரம்பலூர் ஆகிய 4 மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பந்தலூர் வருவாய்த்துறை, நெல்லியாளம் நகராட்சி நிர்வாகம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் ஆல் தி சில்ரன், மகாத்மா காந்தி பொது சேவை மையம் ஆகியன இணைந்து பொதுமக்களிடையே வாக்காளர் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டனர்



நெல்லியாளம் நகராட்சிதூய்மைபணி உதவியாளர் மலர்க்கொடி, தூய்மை தூதுவர்கள் சிந்து,சரஸ்வதி,மகாத்மா காந்தி பொது சேவை மையதலைவர்நௌசாத், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய செயலாளர் சிவசுப்பிரமணியம் பேசும்போது வரும் சட்டமன்ற தேர்தலில் எவ்வித தூண்டுதலுக்கும்ஆளாகாமல், நேர்மையான முறையில் வாக்களிக்க வேண்டும். வாக்கிற்கு வாங்கும் பணம் ஊழலுக்கு வழிவகுத்து, மாநிலத்தின் – நாட்டின் வளர்ச்சியை பாதிக்கும். நேர்மையுடன் நல்லவர்களை தேர்வு செய்து வாக்களிக்க வேண்டும். வேட்பாளர்கள் பிடிக்கவில்லை என்றால் வாக்கு பதிவு இயந்திரத்தில் கடைசியில் உள்ள நோட்டாவிற்கு வாக்களிக்கலாம் என்றார்.

ஆய்வாளர் சிவகுமார் பேசும்போது வாக்காளர் வாக்களிக்க வாக்காளர் அடையாள அட்டை அல்லது அரசால் வழங்கிய புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள் ஏதேனும் ஒன்று எடுத்து செல்லலாம். யாருக்கு வாக்களித்தோம் என்பதற்கு விவிபேட் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் "எனது வாக்கு விற்பனைக்கு அல்ல" மற்றும் "கண்டிப்பாக வாக்களிப்பேன்" என்ற விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டு கையெழுத்து போட்டனர். நிகழ்ச்சியில் நெல்லியாளம் நகராட்சி அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள், கூடலூர் நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் பிரதிநிதிகள், மற்றும் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







ஈரோடு மேற்கு தொகுதி வேட்பாளர், ஈரோடு திமுக தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி பெரியசேமூர் பகுதி 18 வது வார்டில் 09042026 நேற்று காலை உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார், இந்த நிகழ்வில் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், திமுக மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, வார்டு கழகம், சார்பு அணிகள் நிர்வாகிகள், BLA2, BLC, BDA, நிர்வாகிகள் என அனைவரும் கலந்துகொண்டு வேட்பாளருக்கு பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர்.



ஈரோடு மாவட்டத்திலுள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 2,379 அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் பணியாற்றுவதற்காக, கணினி சுழற்சி முறையில் 11,420 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி வகுப்புகள் கடந்த 28ஆம் தேதி வெற்றிகரமாக நடைபெற்றதாக மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான ச.கந்தசாமி தெரிவித்துள்ளனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் விஜய்பாலாஜி, ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட கருங்கல்பாளையம் பகுதி பொதுமக்களிடம் நேற்று (ஏப்.09) காலை வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.வாக்குசேகரிப்பில் ஈடுபடும்போது ஒரு சில இடங்களில் பெண்கள் ஆரத்தி எடுத்தும், பூக்கள் தூவியும் வரவேற்றனர். அரசியல் மாற்றம் வேண்டி விசில் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் விஜய்பாலாஜி கேட்டுக்கொண்டார்.

## IndiaUS trade deal: Indian delegation to visit Washington this month to ink deal, says envoy

*United States Ambassador to India Sergio Gor said on Thursday that an Indian delegation will be heading to Washington later this month as part of talks on a trade deal between India and the US.*

*Taking to X, the US envoy stated that he held a "highly productive" meeting with trade representative Jamieson Greer on how to advance President Donald Trump's trade priorities in South and Central Asia.*

*"The United States and India have previously agreed to a trade deal, and we look forward to welcoming an Indian delegation to Washington later*



*this month," he added further. India and the US announced a bilateral trade deal on February 2, 2026, after months of negotiations between the two delegations. While both leaders – Trump and Prime Minister Narendra Modi – hailed the deal as "historic," the deal with Washington received backlash from the opposition.*

*The key takeaways from the deal were the lowering of tariffs against India from 50 per cent to a final 18 per cent.*

*As per the framework and the announcement by Donald Trump, the deal also includes a $500 billion investment from India for US energy products, aircraft and aircraft parts, metals, coal and technology products for the next five years.*

*Based on the fact sheet issued by the White House, the basis of the agreement also focused on India stopping its purchase of Russian oil and petroleum.*

*However, with the war against Iran, India was "allowed" to buy certain Russian oil barrels, which, as per the US, would bring no financial gain to Moscow.*





ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி திமுகவேட்பாளர் அமைச்சர் சு.முத்துசாமி அவர்களுக்கு 47வதுவார்டு மாமன்ற உறுப்பினர் S.நந்தகோபு வார்டுஎண் 47ல் பாகம் எண்215 ல் நேதாஜிவீதி2ல் உதயசூரியன் சின்னத்திற்கு வீடு வீடாக நடந்து சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து தீவிரமாக வாக்கு சேகரித்தார்



மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட ஆரப்பாளையம் பகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி புதிய நீதிக் கட்சி சார்பில் அதிமுக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடும் மதுரை மத்திய தொகுதி வேட்பாளர் திரைப்பட நடிகர் இயக்குனர் சுந்தர்சிஅவர்களின்தலைமைதேர்தல்அலுவலகம்திறப்புவிழாநடைபெற்றது.இதில்புதியநீதிகட்சியின்நிறுவனதலைவர் ஏ.சி.சண்முகம் தொடங்கி வைத்தார் உடன் தேர்தல் பொறுப்பாளர்கள் சக்தி மோகன், பி.எம்.மன்னன், மார்க்கெட் செந்தில் குமார், ஜெயம் ஜெயபாண்டி, பஜார் துரைப்பாண்டி, ஐடியல்சசி உட்பட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## பனை ஏறும் தொழிலாளி மீது துப்பாக்கிச்சூடு: சப் இன்ஸ்பெக்டர் இசக்கிராஜா சஸ்பெண்ட்

*தென்காசி: பனை ஏறும் தொழிலாளி மீது துப்பாக்கிச்சூடு நடத்திய ஆலங்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் இசக்கிராஜா பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.*

*தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே மருதம்புத்தூரில் கள் இறக்கியதை விசாரிக்க சென்றபோது மணிகண்டன் என்ற பனை விவசாயிக்கும், ஆலங்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் இசக்கி ராஜாவுக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது.*

*இதில் ஆத்திரமடைந்த இசக்கி ராஜா, துப்பாக்கியால் 4 ரவுண்டுகள் சுட்டதில் மணிகண்டனின் இரண்டு கால்களிலும் குண்டுகள் பாய்ந்தன. இதில் விவசாயி மணிகண்டன் படுகாயமடைந்தார்.*

*விசாரிக்க சென்ற இடத்தில் மணிகண்டன் முதலில் தன்னை தாக்கியதாகவும், அதிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ளவே துப்பாக்கியால் மணிகண்டனை சுட்டதாகவும் இசக்கி ராஜா, காவல்துறை உயர் அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்துள்ளார்.*



*குறிப்பாக, சம்பவ இடத்தில் இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. தேர்தல் நேரத்தில் நடைபெற்றஇந்ததுப்பாக்கிச் சூடு சம்பவம் ஆலங்குளம் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.*

*இதற்கிடையே, துப்பாக்கியால் சுடும் அளவுக்கு மணிகண்டன்என்னதவறுசெய்தார் என கேள்வி எழுப்பி அவரது குடும்பத்தினர்மற்றும் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாட்டின் பல இடங்களில் கஞ்சா மதுப்போதை அதிகரிக்கும் நிலையில் அதுபோன்ற நபர்களை பிடிக்காமல் விவசாயியைச் சுட்டு பிடிக்கும் அளவுக்கு என்ன அவசியம் எழுந்தது எனவும் மணிகண்டன் தரப்பில் உறவினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.*

*இதற்கிடையில் உதவி ஆய்வாளர் இசக்கி ராஜா, சாதி பெயரை சொல்லி தங்களைத் திட்டியதாக மணிகண்டன் குடும்பத்தினர் பகீர் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளனர். எனவே, மணிகண்டனுக்கு ஆதரவாக ஆலங்குளம் பேருந்து நிலையம் அருகே உள்ள மறைந்த முன்னாள் முதலமைச்சர் காமராஜர்சிலைமுன்பாக உறவினர்கள் மற்றும் ஊர் மக்கள் நேற்றிரவு ஒன்று கூடினர்.இதுதவிரசிலசாதி அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகளும் அங்கு திரண்டு போராட்டத்தில் பங்கேற்றனர்.*

*மேலும், மணிகண்டனின் உடன்பிறந்த சகோதரரின் 17 வயது மகள் அளித்த புகாரின் பேரில் ஆலங்குளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் இசக்கி ராஜா உள்பட மூன்று பேர் மீது கொலை முயற்சி, பெண் வன்கொடுமை தடுப்புச் சட்டம், ஆபாசமாகப் பேசுதல், கடுமையான காயம் ஏற்படுத்துதல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ்அதிரடியாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இதனிடையே, காவல் உதவி ஆய்வாளர் இசக்கி ராஜாவை சஸ்பெண்ட் செய்து நெல்லை சரக டிஐஜி சரவணன் உத்தரவிட்டுள்ளார்.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.